## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

முன்னிலை:- திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5-ம் நாள் வியாழக்கிழமை

***இடைமனு எண். 52/2021 in அசல் வழக்கு எண்: 3/2018***

1. கோவிந்தசாமி (இறந்தார்)
2. வீராசாமி .... மனுதாரர்கள்/வாதி மற்றும் Proposed party

/எதிர்/

1. கடலூர் மாவட்ட ஆட்சியர்
2. சிதம்பரம் தாலுக்கா வட்டாட்சியர்
3. மஹாதேவன் (இறந்தார்)
4. ராதாகிருஷ்ணன்
5. வைத்தியநாதசாமி
6. தெய்வநாயகம்
7. அரிஹரன்
8. சற்குணாம்பாள்
9. சுமதி
10. சாந்தி
11. நவீன்ராஜ்
12. M.சந்தோஷம்
13. M.மனோகரன்
14. M.விஜயகுமார்
15. செல்வநாயகி
16. விமலா
17. பிரேமா பழனிசாமி ….. எதிர்மனுதாரர்கள்/1 முதல் 11 பிரதிவாதிகள்/ 12 முதல் 17 Proposed பார்ட்டிகள்

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 04.08.2021-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.கலியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 1, 2, 5, 7 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் இறந்தும், 4, 6, 10 முதல் 17ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ஞானசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ்

இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில், 26.09.2020-ல் காலம் சென்ற 3ம் பிரதிவாதி/3ம் எதிர்மனுதாரர்/மஹாதேவனுக்கு இந்த 12 முதல் 17 எதிர்மனுதாரர்களை வாரிசுதாரர்களாக அங்கீகாரம் செய்து கொண்டு அவர்களை அசல் வழக்கில் 12 முதல் 17 பேர்களை பிரதிவாதிகளாக சோத்து கொண்டு அசல் வழக்கை மேல்நடத்த உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 4ன் கீழ் தாக்கல் செய்த மனு.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-**

இம்மனுவின் 1ம் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், 1ம் மனுதாரர் 2ம் மனுதாரரின் தகப்பனார் என்றும், 1ம் வாதி கோவிந்தசாமி தாவாவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்க தாவா 1 முதல் 6 பிரதிவாதிகள் மீது தாவா தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா நிலுவையில் இருந்தபோது வாதி கோவிந்தசாமி காலமாகியதினால் IA.No.408/2019-ல் 2ம் மனுதாரரை 2ம் வாதியாக சேர்க்க 1 முதல் 11 பேர்கள் மீது மனு போட்டு, அது 18.12.2020 அன்று அனுமதிக்கப்பட்டதாகவும், அதன் பேரில் பிரதிவாதி ஒரு திருத்த மனு போட்டுள்ளதாகவும், இந்த நிலையில் தாவாவில் 3ம் பிரதிவாதி இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரரான மஹாதேவன் 26.09.2020-ல் எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்து விட்டதாகவும், அவருக்கு 12 முதல் 14 எதிர்மனுதாரர்கள் மகன்கள் என்றும், 15 முதல் 17 நபர்கள் மகள்கள் என்றும், அவர்களை தவிர மஹாதேவனுக்கு வேறு வாரிசுகள் இல்லை என்றும், 3-ம் பிரதிவாதிக்கோ அவர் வாரிசுகளுக்கோ தாவா சொத்தில் எந்த உரிமையம் இல்லை என்றும், காலம் சென்ற 3-ம் பிரதிவாதி/3-ம் எதிர்மனுதாரர் மஹாதேவனுக்க இந்த மனு 12 முதல் 17 நபர்களை வாரிசுகளாக சேர்த்து கொண்டு அசல் வழக்கை மேல்நடத்த கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 12-ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையை 4, 6, 10, 11, 13 முதல் 17-ம் எதிர்மனுதாரர்கள் ஏற்றுக் கொண்டதன் சுருக்கம்:**

மனுதாரர் 3ம் பிரதிவாதிக்கு வாரிசுகளை சேர்ப்பதில் ஏற்பட்ட abatement-யை ரத்து செய்து வாரிசு சேர்க்க கோரும் மனுவை ஏற்று மேல் உத்தரவு செய்ய வேண்டும் என்று கொடுத்துள்ள மனு மிகவும் காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு என்றும்,

ஆகவே மனு தள்ளுபடிக்கு உகந்தது என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் தாவா பெண்டிங்காக இருந்தபோது 1ம் வாதி கோவிந்தசாமி காலமாகியதினால் IA.No.408/2019-ல் பிரதிவாதிகளை 7 முதல் 11 பேர்களையும், தன்னையும் வாரிசுகளாய் பாவித்து தன்னை 2ம் வாதியாகவும், 7 முதல் 11 பேர்களை 7 முதல் 11 பிரதிவாதிகளாக சேர்க்க மனு போட்டு, அதில் 18.12.2020-ல் அனுமதிக்கப்பட்டு, அதன் பேரில் திருத்தல் மனு போட்டு IA.No.408/2019 மனு அமுலில் இருந்த போது 3-ம் பிரதிவாதி மஹாதேவன் Intestate-ஆக காலமாகி விட்டதினால் இந்த மனுவில் 12 முதல் 17 பேர்களை அவர் வாரிசாக நியமிக்கவும் அதன் அடிப்படையில் திருத்தம் கோரும் மனுவும் 14.12.2020ல் கோர்ட் வரவு பேப்பரில் தாக்கல் செய்யப்பட்டதாகவும், 24.12.2020-ல் 3ம் பிரதிவாதி இறந்த விபரம் தெரிவிக்கப்பட்டு, அது ரிக்கார்டாகி Steps என்று உத்திரவாகி இருந்தது என்றும், மேற்படி 14.12.2020-ல் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் ஆர்டர் செய்யப்படவில்லை என்று ரிட்டனாகி விட்டது என்றும், வழக்கு 15.12.2020-லிருந்து 18.12.2020-க்கு ஒத்திப்போனது என்றும், 18.12.2020-ல் மேற்படி இரண்டு மனுக்களையும் திரும்ப திறந்த கோர்ட்டில் தாக்கல் செய்ய முற்பட்டபோது அது வழக்கறிஞரிடம் திரும்ப கொடுக்கப்பட்டு, வழக்கு Passover ஆகி 18.12.2020-ல் IA.No.408/2019-ல் அனுமதிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் திருத்தல் கோரும் மனு போடப்பட்டதாகவும், மேற்படி 18.12.2020ல் ஏற்பட்ட ஆர்டரை Review செய்து, மற்றும் தாக்கல் செய்யப்பட்டு அத்துடன் இரண்டு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டது என்று சொல்லும் ஒவ்வொரு அம்சங்களும் உண்மையல்ல என்றும், இந்த மனுவில் முதல் வாதி இறந்த தேதியை குறிப்பிடப்படாமல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இறந்து போன 3ம் பிரதிவாதிக்கு ஏன் உரிய காலத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதற்கான காரணத்தை அபிடவிட்டில் சொல்லி உள்ளார் என்றும், எந்த பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்தார் என்ற விபரமும் இல்லை என்றும், 18.12.2020ல் ஏற்பட்ட ஆர்டரை review செய்து தாக்கல் செய்யப்பட்ட விபரம் இந்த எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றும், ஆகையால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள Abatement மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவு செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

4. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் தாக்கல் இல்லை.

**5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா?**

**இல்லையா? என்பதேயாகும்.**

6. இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது அசல் வழக்கானது விளம்புகை மற்றும் சொத்து சுவாதீனம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது இந்த மனுவின் 3ம் எதிர்மனுதாரரான மஹாதேவன் 26.09.2020-ல் எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்து விட்டதாகவும், அவருக்கு 12 முதல் 14 எதிர்மனுதாரர்கள் மகன்கள் என்றும், 15 முதல் 17 நபர்கள் மகள்கள் என்றும், அவர்களை தவிர மஹாதேவனுக்கு வேறு வாரிசுகள் இல்லை என்றும், 3-ம் பிரதிவாதிக்கோ அவர் வாரிசுகளுக்கோ தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும், காலம் சென்ற 3-ம் பிரதிவாதி/3-ம் எதிர்மனுதாரர் மஹாதேவனுக்கு இந்த மனு 12 முதல் 17 நபர்களை வாரிசுகளாக சேர்க்க மனுதாரர் இந்த இடைமனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த 12 முதல் 17 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் அவசியமான தரப்பினர்கள் என்பதாலும், எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு ஆட்சேபனை தாக்கல் செய்திருந்தபோதும், இம்மனுவை நிராகரிப்பதற்கான குறிப்பிட்டு எந்த காரணமும் சொல்லப்படவில்லை. அசல் வழக்கில் அவசியமான தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்றால் அதன் விளைவு எதிர்மனுதாரர்களுக்கே பாதகமாக அமையும் என்பதால் இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர் தாக்கல் செய்த இடைமனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 05.08.2021ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-.V.Geetha)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.